Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 37 இதழ் - 9 செப்டம்பர் - 2024

தனிப்பிரதி ரூ.10/-



ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

CHURCH OF CHRIST
PROCLAIM THE GOSPEL
KANGAYAM - 638 701. INDIA

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# இருபத்தேழாம் வேதாகம கருத்தரங்கம்

## 27th Annual Bible Lectureship

**கருப்பொருள் : "அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய் (I தீமோ 6:12)"**

**THEME : " To which you were also called ( I Tim 6:12) "**

**நாள் : அக்டோபர் 11, 12 – 2024 (வெள்ளி, சனி)**
(அரசு விடுமுறை நாட்கள்)

**நேரம்**
வெள்ளி : காலை 8:45 - மாலை 4:45 மணி
சனி : காலை 8:45 - மதியம் 1:00 மணி

**இடம்**
**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.

## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. கொடுத்தல் 11
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 20
6. அடையாளங் காணாத... 21
7. இயேசு அன்பாயிருந்த குடும்பம் 24
8. இயேசுவானவர் தேவ தூதரிலும்... 28
9. ஓடு! பின்னிட்டு பாராதே 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 37 September - 2024 Issue - 9


ஆசிரியர் உரை

## உக்கிராண உத்தியோகம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது !

முதலாவது, தலைப்பிலுள்ள வார்த்தைகளுக்கான பொருள் விளக்கங்களைத் தெரிந்து கொண்டு தொடர்ந்து செல்லுவோம். **உக்கிராணம்** என்பது பிறருடையதை நிர்வாகம் செய்வது அல்லது கவனித்துக் கொள்வது. **உத்தியோகம்** என்பது கடந்த தலைமுறை களில் பழக்கத்தில் இருந்த ஒரு தமிழ்ச் சொல் தான். இதன் பொருள் **வேலை** அல்லது **பணி**. ஆக, **உக்கிராண உத்தியோகம்** என்பது தன்னுடையதல்லாத ஒன்றை நிர்வகிக்கும் ஒரு பணி அல்லது பொறுப்பு. உதாரணமாக, யோசேப்பு தன் சகோதரர்களின் சதியால் எகிப்துக்குக் கடத்திச் செல்லப்பட்டு, ஓர் அடிமையாக விற்கப்பட்ட போது, இஸ்மவேலர்களிடத்திலிருந்து காசுக்கு வாங்கின போத்திபார் **கர்த்தர் யோசேப்போடே இருக்கிறதையும், அவன் காரியசித்தியுள்ள வனாகவும் இருக்கிறானென்பதையும் கண்டு, தன் வீட்டுக்கு விசாரணைக்காரனாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்** (ஆதி 39:1-4) இங்கே யோசேப்புக்கு கொடுக்கப்பட்டது தான் உக்கிராண உத்தியோகம் என்பது .

அடுத்ததாக, நாம் பார்க்கவிருப்பது **ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது** என்னும் பதம். இது, ஏதோ ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தாண்டி பொருள் பொதிந்த வார்த்தையாக உள்ளது. எப்படியெனில், ஒப்புக்கொடுத்தலில், **பெரும் நம்பிக்கை** உள்ளடங்கியிருக்கிறது. இதற்காக ஓர் உதாரணம் பாருங்கள். முற்பிதாக்களில் முதலாமவரான ஆபிரகாமைச் சோதிக்கும்படி, தேவன் ஏகபுத்திரனாகிய ஈசாக்கை தகனபலியாகக் கேட்டார் (ஆதி 22:1,2). நம்மைப் போன்றவர்களால் எண்ணியே பார்க்க முடியாத இச்சூழலுக்குத் தன் முழு இசைவைத் தந்து, துரிதமாகச் செயல்பட்டு, தன் குமாரன் ஈசாக்கை வெட்டும்படி தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்த வேளையில், பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ

அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக **ஒப்புக்கொடுத்தபடியினால்** நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் (ஆதி22:12) தனக்கும், சாராளுக்கும் சரீரம் செத்துப்போய், வழிபாடுகள் நின்று போன நிலையில், ஈசாக்கை அற்புதவிதமாகத் தந்தவர், இந்த எக்கச்சக்க சூழலிலும் பிள்ளையை உயிரோடே கொடுப்பார் என்னும் **மாபெரும் நம்பிக்கை இந்த ஒப்புக்கொடுத்தலில் அடங்கியிருக்கிறது.** இந்தப் பொருள்களை மனதில் கொண்டவராகவே பவுலடியார் இவ் வார்த்தைகளை கொரிந்தியர் நிருபத்தில் **உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதே** என்று எழுதியுள்ளார். (1 கொரி9: 17)

சரி, இப்போது நாம் நமது மாறாத வழக்கத்தின்படி இதன் பின்னணிக்குள்ளாகக் கடந்து சென்று, பிறகு நமக்கான சில பாடங்களை கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

கொரிந்து பட்டணம் பவுலடியாரின் நாட்களில் மிகவும் பிரபலமாகவும், முக்கியமாகவும் இருந்த ஒரு பட்டணம். உலகளாவிய வாணிப கேந்திரமாகவும், சீரழிந்த கலாச்சாரத்தின் மையமாகவும், விக்கிரக வணக்கங்களின் இருப்பிடமாகவும் இருந்தது. அந்நாட்களில் சுமார் 7 லட்சம் மக்கள் தொகை கொண்ட இப்பட்டணத்தில், நற்செய்தியின் வல்லமையால் கிறிஸ்துவின் சபையை அங்கே பவுலடியாரால் ஏற்படுத்த முடிந்தது. (அப் 18:1–17) ஆயினும், இச்சபை பவுலுக்கு ஒரு சவாலாகவே இருந்தது. ஆம், கேடுகள் நிறைந்த பட்டணத்தில் கிறிஸ்துவின் உபதேசத்தினடிப்படையில் சபையை ஏற்படுத்தி இருந்தாலும். ஏற்படுத்தின சபைக்குள்ளிருந்து கொரிந்துவை முழுமையாக வெளியேற்ற முடியவில்லை. அதாவது, பழைய வாழ்வின் பழக்க வழக்கங்கள் அவர்களைத் தீண்டி சீரழித்துக் கொண்டேயிருந்தது. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் தான், அவர்களைச் சீர்படுத்தும்படியான நோக்கில், இந்த **ஒழுங்கு நடவடிக்கை** நிருபம் எழுதப்பட்டது. இந்த முதலாம் நிருபம் ஒரு **மூன்று** பதில்களை உள்ளடக்கியதாக உள்ளது. முதல் பதில், குலோவேயாள் வீட்டாரால் பவுலடியாருக்கு **அறிவிக்கப்பட்டதை** அடிப்படையாகக் கொண்டது (1கொரி 1–4) இரண்டாவது பதில், அவர்களுக்குள்ளே பிரசித்தமாயிருந்த ஒழுக்கக் கேடுகள் பற்றி அவர் **அறிந்து கொண்டவைகளை** அடிப்படையாகக் கொண்டது (1 கொரி 5.6 அதி) மூன்றாவது பதில், அவர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை **அடிப்படையாகக் கொண்டது** (1 கொரி 7–16 )

இவைகளில் மூன்றாவது பதிலில் தான் நமது தலைப்புக்கான வசனம் இடம் பெற்றுள்ளது. குறிப்பாக, 9–ம் அதிகாரத்தில், ஓர் ஊழியக்காரனாக தனக்குள்ள உரிமைகள் பற்றிப் பேசி விட்டு, **சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட**

**எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையா யிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ! நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு. உற்சாகமில்லாதவனாய் செய்தாலும் உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே** (1 கொரி 9:16,17) என்று எழுதியுள்ளார். வசனம் 16-ல், தனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற உக்கிராண உத்தியோகம் சம்பந்தமாக அதாவது, சுவிசேஷம் அறிவிப்பது சம்பந்தமாக ஒரு **மூன்று காரியங்களை** நமக்கு வெளிப்படுத்துகிறார். இம்மூன்றையும் நாம் ஒவ்வொன்றாகப் பார்த்து நற்செய்தி அறிவிப்பதில் நமக்குள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்னவென்று பார்த்து விடுவோம்.

**I. சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வருகிறேன்**

உக்கிராண உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்ட பவுலடியாரிட மிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவர் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவராக இருந்துள்ளார் என்பது.

பிரசங்கித்தல் என்றால் ஒன்றை அறிவித்தல். அதாவது, தேவையாயிருப்பவருக்கு ஒன்றைக் கொண்டு போய் சேர்த்தல். இது குறிப்பாக இரட்சிப்படைந்தவர்களுக்கும், இழந்து போன நிலையிலிருப்பவர்களுக்கும் இடையே நடக்க வேண்டிய ஒன்று. இப்பொருளைக் கொண்டே இயேசுக் கிறிஸ்து, நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 15:15,16) என்று கட்டளையிட்டார்.

இயேசு ஆண்டவர் தன்னைப் பிரத்யேகமாக தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்து அதன் மூலம் தான் பெற்றுக்கொண்ட சுவிசேஷம் அறிவிக்கும் பணியை மனப்பூர்வமாக பவுல் செய்து கொண்டு வந்தார். ஆகவே தான், அவரால் இப்படிப்பட்ட வார்த்தைகளைத் தன் நிருபங்களில் வடிக்க முடிந்துள்ளது. **கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால், ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்று** (ரோமர் 1:14,15).

சரி, இங்கே சுவிசேஷம் **ஏன் முக்கியமானதென்ற** கேள்வி எழுகிறது. சுவிஷேசம் என்பது இழந்து போன மனிதனைத் தன்னிடமாக மீண்டும் கொண்டு வந்து சேர்க்கும்படியாகத் **தேவன் தீட்டின தீர்மானத்தின்** ஒரு பகுதியே. இந்தச் சுவிசேஷம் அவருடைய அநாதித் தீர்மானத்தின் படியானதாகமட்டுமல்லாமல், அவருடைய **அநந்த ஞானத்தின்படியான** ஒன்றாகவும் உள்ளது (எபே 3:9-11)

இத்திட்டத்தின் விளைவாகவே இயேசு பூமிக்கு அனுப்பப்பட்டார் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றி உலகிற்கு அறிவித்து, இழந்துபோன மனிதனை மறுபடியும் தேவனோடு சேர்ப்பதற்கான ஒரு கருவிதான் சுவிசேஷப் பிரசங்கம் (1கொரி 15:1–6) பவுலடியார் தேவ ஞானத்தின்படியான இத்திட்டம் குறித்து இப்படியாக எழுதியுள்ளார். எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே **விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று** என்று (1கொரி 121) ஆகவே, தான், சுவிசேஷம் முக்கியமானது.

அடுத்து எழக்கூடிய ஒரு கேள்வி, இந்த சுவிசேஷத்தில் என்ன இருக்கிறது? என்பது, இக்கேள்விக்கு நிறைய பதில்களைச் சொல்ல முடிந்தாலும் கூட ஒரு மூன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். 1. நற்செய்தியில் ஒருவன் **விசுவாசிக்க வேண்டிய உண்மைகள்** அடங்கியிருக்கிறது. அதாவது, இயேசு உலகத்தாரின் பாவங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டார், தேவ பெலத்தால் அவர் உயிரோடே மூன்றாம் நாளில் எழுப்பப்பட்டார். அத்தோடு இரட்சகராகவும், ராஜாவாகவும் இருக்கும்படி உயர்த்தப்பட்டார் மற்றும் ஒரு நாளில் நியாயந்தீர்க்க வரப்போகிறார் என்ற உண்மைகள். 2. ஒருவன் **கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகள்** நற்செய்தியில் உண்டு அதாவது, விசுவாசித்தல், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், ஞானஸ்நானம் என்று கீழ்ப்படிவதற்கான கட்டளைகள் நற்செய்தியின் உபதேசத்தில் உண்டு. 3.ஒருவன் இம்மையிலும், மறுமையிலும் **பெற்று அனுபவிப்பதற்கான வாக்குத்தத்தங்கள்** உண்டு. அதாவது, பாவமன்னிப்பு, பரிசுத்த ஆவியானவரின் வரம், நித்திய ஜீவன் என்று இவைகள் எல்லாம் நற்செய்தியில் அடங்கியிருக்கிறது. சுவிசேஷம் பற்றிய இப்பேருண்மைகளைப் பவுலடியார் அறிந்திருந்தபடியால் தான், சுவிசேஷம் அறிவிப்பதைப் பேச்சாக மட்டும் வைத்திராமல், உயிர் மூச்சாகவும் கொண்டிருந்தார். ஆகவே தான், கொரிந்தியருக்குச் சொல்லும்போது சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும் மேன்மை பாராட்ட இடமில்லை என்று கூறியுள்ளார்.

அப்படியானால் அருமையானவர்களே! கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதில் நாம் எந்த இடத்தில் உள்ளோம்? நம்முடைய செயல்பாடுகள் எப்படி உள்ளது? சுவிசேஷம் அறிவிக்கும் உக்கிரான உத்தியோகம் பவுலடியாரிடம் மாத்திரம் ஒப்புவிக்கப்படவில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இதில் பொறுப்பும், கடமையும் உள்ளது. ஆவியில் இழந்து போன நிலையிலிருக்கும் உலகின் மாந்தர்களை இரட்சிக்கும்படியான மாபெரும் பொறுப்பை, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரிடம் தேவன் **நம்பிக் கொடுத்துள்ளார்.**

ஏனெனில், அவர்களால்தான் கலப்படமற்ற சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியும் (கலா 1:7-9). இது உண்மையாயின், நாம் இந்த வேலையைச் செய்து கொண்டுள்ளோமா அல்லது நம்பிக்கைத் துரோகிகளாக வாழ்ந்து கொண்டுள்ளோமா சொல்லுங்கள்? சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படி நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் என்பதை ஒருபோதும் மறந்து விடக் கூடாது (2 கொரி 5:10).

**II அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது**

உக்கிராண உத்தியோகத்தைப் பெற்றுக் கொண்ட பவுலடியாரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், நற்செய்தியை அறிவிப்பதைத் தன் மேல் விழுந்த கடமையாகக் கொண்டிருந்தார் என்பது.

**கடமை** என்ற வார்த்தைக்கான பொருள், **செய்து தீரவேண்டிய இன்றியமையாத செயல்.** ஆயினும் கூட, செய்ய வேண்டியவைகளை செய்ய வேண்டிய விதத்தில், செய்ய வேண்டிய அளவுக்குச் சீராகவும், சிறப்பாகவும், செய்கிறார்களா என்பது மிகப் பெரிய கேள்வி. எல்லோரும், பொறுப்புணர்வும், இறை உணர்வும் இருந்தால் மட்டுமே ஆற்ற வேண்டிய கடமையைக் கன கச்சிதமாகச் செய்து முடிக்க முடியும். கடமையாயிருக்கிறது என்பதற்கு ஆங்கில வேதாகமத்திலும், மூல மொழியிலும் வேறொரு பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, **அதற்கான அவசியம் என்மீது சுமத்தப்பட்டிருக்கிறது** என்று. இச்சொற்றொடர் சற்று கூடுதலான பொருளை நமக்குக் கொடுக்கிறது. அதாவது, தன் மீது ஏற்பட்டிருக்கும் பாரத்தைச் சுமந்தாக வேண்டும் என்று.

பவுலடியார் இந்த வார்த்தைகளை வடித்த போது, அப்போஸ்தலர் 9-ம் அதிகாரத்துச் சம்பவம் அவர் நெஞ்சிலே நிழலாடியிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் சபைக்கும், கிறிஸ்துவின் சீடர்களுக்கும் எதிராக நடந்து கொண்ட அனைத்திற்கும் நான் பரிகாரம் தேடியாக வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆம், பெருஞ்சுமையை நான் வலிய என் மீது சுமத்திக்கொண்டேன். அதை நான் எப்படியாகிலும் ஈடுகட்டியாக வேண்டும் என்று எண்ணியிருப்பார். கிறிஸ்துவுக்கு எதிராகப் பவுலடியார் செய்த காரியங்கள் கொஞ்சமா? நஞ்சமா? கர்த்தருடைய சபையைத் துன்பப்படுத்திப் பாழாக்கினான் (கலா. 1:13). வீடுகள் தோறும் நுழைந்து கிறிஸ்தவர்களை இழுத்து வந்து சிறையில் தள்ளினான் (அப் 8:3). விசுவாசிகளை சாகும் வரை துன்புறுத்தினான் (அப் 22:4). விசுவாசிகள் தேவதூஷணம் செய்யும்படி கட்டாயப்படுத்தினான் (அப் 26:11). இன்னும் அநேக காரியங்களைச் செய்யும்படி திட்டமிட்டிருந்தான் (அப் 28:9). இந்நிலையில் தான், எருசலேமிலிருந்து சுமார் 200 கி.மீ தூரத்திலிருந்த தமஸ்குவுக்கு சீறிச்

சென்றபோது, மத்தியான வேளையில் இயேசுவால் சந்திக்கப்பட்டு சுவிசேஷப் பணிக்கான கட்டளையைப் பெற்றுக் கொண்டான் [அப் 31:6;20:15-19] இப்படித்தான் சந்திக்கப்பட்டது குறித்துப் பின்னாளில் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில், **நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ** அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன் என்று கூறுகிறார். [பிலி 3:12] நான் தப்பிக்க முடியாத அளவுக்கு இயேசு என்னைப் பிடித்துக் கொண்டார். இயேசுவின் காரியங்கள் என்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அதை நான் நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று எண்ணியவராகவே நற்செய்திப் பணியாற்றியுள்ளார்.

அப்படியானால் அருமையானவர்களே! நற்செய்தி அறிவிக்கும் பணியை நாம் எப்படியாகப் பார்க்கிறோம்? நற்செய்திப் பணிக்கான பொறுப்பும், கடமையும் நமக்கும் இருக்கிறது என்று உணருகிறோமா? ஒருவேளை, பவுலடியார் போன்று நான் ஒன்றும் கிறிஸ்துவுக்கும், சபைக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராக எதுவும் செய்யவில்லையே என்று எண்ணலாம். இங்கே கவனியுங்கள், பவுலடியார் **நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாத ஒரு வாழ்க்கை வாழ்ந்த நிலையில்,** [பிலி 3:6] கிறிஸ்துவுக்கும். கிறிஸ்தவத்துக்கும் எதிரான காரியங்களை **அறியாமல்** அவிசுவாசத்தினால் அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன் [1தீமோ. 1:13] என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஆகவே, பவுலடியாரோடு இணை வைத்து நாம் நம்மை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். ஒரு கிறிஸ்தவனின் **பழைய வாழ்வு** குறித்து எபேசியர் நிருபம் எப்படிக் கூறுகிறது பாருங்கள். அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் [5:1-3] என்று.

உண்மையைச் சொல்வதென்றால், பவுலடியார் போலல்லாமல், நாம் **அறிந்தே பாவம் செய்கிறவர்களாக** இருந்துள்ளோம். ஆகவே, சுவிசேஷம் அறிவிப்பதில் பவலடியாரைக் காட்டிலும் நமக்கு அதிகக் கடன் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் இந்த உண்மையைப் புரிந்து சுவிசேஷப் பணியைத் தலையாய பணியாக ஏற்றுச் செயல்பட வேண்டும். ஆம், அது நம்மீதும் விழுந்த கடமையாயும், நம்மீது சுமத்தப்பட்ட பொறுப்பாகவும் உள்ளது. உணர்ந்து செயல்படுவோம்.

**III. பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ**

உக்கிராண உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்ட பவுலடியாரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் அது பெரும் ஆபத்தைக் கொண்டு வரும் என்பது.

**ஐயோ** என்பதற்கான பொருள், **பெரும் வருத்தம் பெருந்தொல்லை, கடுந்துயரம்** என்பது. இக்கடும் வார்த்தையை தேவன் தேசங்களுக்கு எதிராக, பட்டணங்களுக்கு எதிராக, தனி மனிதனுக்கு எதிராக தனது நியாயத்தீர்ப்பு இருக்கிறதென்பதைச் சொல்லுவதற்கு தீர்க்கதரிசிகள் மூலம் பயன்படுத்தியிருக்கிறார். தேவத்துவத்துள் உள்ள பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவராலும் **இவ்வார்த்தை** பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஏசா 5:20 ; மத் 23:25). புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை 41 முறையும், ஐயோ என்னும் வார்த்தை மத்தேயு 21 ம் அதிகாரத்தில் மட்டும் ஏழு முறையும் இடம் பெற்றுள்ளது. நம் பக்தி வாழ்வில் செய்தே ஆக வேண்டிய ஒரு காரியத்தைச் செய்யாமலிருந்து நமக்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும் பெருந் துயரத்தையோ, ஆபத்தையோ வரவழைக்க நாம் யாரும் விரும்ப மாட்டோம். ஆயினும், அப்படிப்பட்ட ஓர் ஆபத்துக்கு வாய்ப்பிருக்கிறதென்பதை நாம் மறுக்க முடியாது.

உண்மையில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் **ஐயோ** வின் கீழ் தான் வாழ்ந்து கொண்டுள்ளான். எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று யாரும் ஒதுங்கி விட முடியாது. எனக்குத்தான் பவுலடியார் போன்று சுவிசேஷம் அறிவிப்பதற்கான **நேரடி அழைப்பு** இல்லையே என்று ஒருவேளை நீங்கள் கூறலாம். ஆயினும், நமக்கும் அழைப்பு இருக்கிறதென்பதை மறந்து விடாதீர்கள். எப்படியெனில், நாம் **சுவிசேஷத்தினால்** இந்த இரட்சிப்புக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 தெச.2:14). ரோமர் 1:14-ன் படி நற்செய்தியின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்த ஒவ்வொருவரும், நற்செய்தியைக் கேள்விப்படாத ஒவ்வொருவருக்கும் கடனாளிகளாகவே உள்ளார்கள்.

எப்படியெனில், பவுலடியார் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில், அந்தச் சுவிசேஷம் **உலகமெங்கும்** பரம்பிப் பலன் தருகிறது என்றும், அந்தச் சுவிசேஷம் **வானத்தின் கீழிருக்கிற** சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறுகிறார் (1:4,24). இந்த உலக சாதனை பவுலடியார் உட்பட 13 அப்போஸ்தலர்களாலும், சில சிறப்பு ஊழியர்களால் மட்டும் நடந்திருக்குமென்று நினைக்கிறீர்களா? சாத்தியமே இல்லை. நாமும் இந்த உலகத்திலே தான் வாழ்ந்து கொண்டுள்ளோம்! இந்த நவீன காலத்திலேயே எல்லா இடங்களுக்கும் சென்று எல்லாரையும் நற்செய்தியினிமித்தம் சந்திப்பது எவ்வளவு சவாலானது என்பதை நன்கறிவோம். அப்படியிருக்கும்போது, அன்றைக்கு மட்டும் அது எப்படி சாத்தியமாயிருக்க முடியும்? இங்கே ஒளிந்திருக்கும் சூட்சமம் இது தான். சிதறிப்போன கிறிஸ்தவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்துள்ளார்கள் (அப் 8:4). கிறிஸ்துவின் உபதேசப்படி இரட்சிப்படைந்த ஒவ்வொருவரும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்தியிருந்திருக்கிறார்களென்றே தெரிகிறது. அப்படித்தானே!

இதைப் எப்படித் திட்டமாகச் சொல்ல முடியும் என்று ஒருவேளை நீங்கள் கேட்கக்கூடும். கவனியுங்கள்: இயேசு ஆண்டவர் பிரதான கட்டளையை சீடர்களுக்குக் கொடுத்தபோது, சீடர்களாகிய **நீங்கள் உயிரோடிருக்குமளவும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்** என்று கூறாமல், இதோ, **உலகத்தின் முடிவு பரியந்தம்** நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' என்றே சொன்னார் (மத் 28:20). ஏன்? சுவிசேஷம் அறிவிக்கும் பணி அப்போஸ்தலர்களோடு முடிந்தபோகாமல், அவர்களைத் தாண்டி உலகத்தின் முடிவு பரியந்தமும் அது செல்ல வேண்டுமென்பது தானே அவர் திட்டமாக இருந்துள்ளது. புரிகிறதா?

அப்படியானால், உங்களுக்கும், எனக்கும் இப்பணியில் பங்கிருக்கிறதா? இல்லையா? நிச்சயமாகவே இருக்கிறது. உக்கிராண உத்தியோகம் பவுலடியாருக்கு மட்டுமல்ல நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஓர் உக்கிராணக்காரன் தன் எஜமானுடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கிறவனாக இருக்க வேண்டும். அப்படியானால் நம் பரலோக எஜமானாகிய தேவனுடைய விருப்பம் என்ன? **எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவதும், சத்தியத்தை அறியும் அறிவை அடைவதும் தான் அவர் விருப்பம்.** இது உண்மையானால், நாம் ஒவ்வொருவரும் நற்செய்திப் பணியில் என்ன செய்து கொண்டுள்ளோம்? ஓர் உக்கிராணக்காரன் அல்லது விசாரணைக்காரன் உண்மையும், விவேகமும் (லூக் 12:42) உள்ளவனாக இருக்க வேண்டுவது அவசியம்.

எனவே, கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த ஒவ்வொருவரும் நற்செய்திப் பணியில், ஆத்தும ஆதாயம் செய்வதில் முழு முனைப்புக்காட்ட வேண்டும். இது என்னுடைய வேலையல்ல. இது ஊழியக்காரர் வேலை, மூப்பருடைய வேலை அல்லது சபை முன்னோடிகளின் வேலை என்று எண்ணி ஏனோ தானோ என்று இருந்து விடுவோமானால் நம்முடைய உக்கிராண உத்தியோகத்திலிருந்து விழுந்து போய், **ஐயோ** வை வலியத் தேடிக் கொள்ளுகிறவர்களாக மாறிவிடுவோம். அதுமாத்திரமல்ல நியாயத்தீர்ப்பு நாளில், உத்தமமும், உண்மையுள்ள ஊழியக்காரனே என்றழைக்கப்பட்டு, எஜமானுடைய சந்தோசத்துக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை இழந்தும் விடுவோம்.

**ஆகவே, உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக வாழ்வோம்! ஆமென்!!**

***எதிர்வரும் அக்டோபர் திங்கள் 11,12 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள கருத்தரங்கில் ஜெபத்தோடு கலந்து கொள்ளும்படி அன்பாய் அழைக்கிறேன்.***

***- ஆசிரியர்***

# கொடுத்தல்

J.C. சோட்

**க**டைசியாக, புதிய ஏற்பாட்டு ஆராதனை முறையின் இறுதிப்பகுதியான கொடுத்தல் என்பதற்கு நாம் வந்துள்ளோம். வேதாகமம் தெளிவாகச் சொல்லும் காரியங்களில் இதுவும் ஒன்று. இருப்பினும் மக்கள் பலர் இக்காரியத்தைப் பற்றி மிகவும் அறியாமையில் இருக்கின்றனர். எனவே, தேவனுடைய வார்த்தை இதைப் பற்றிக் கூறுவது என்ன என்று நாம் பார்க்கலாம். வேதத்தின் சில முக்கிய பகுதிகளைச் சுட்டிக் காட்டி நாம் தொடங்குவோம்.

என்னோடு 1 கொரிந்தியர் 16:1,2 வசனங்களைப் படியுங்கள் : **பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்.** மேற்கொண்டு செல்லுவதற்கு முன்பு, இந்த வசனங்களை ஆராய்ந்து பார்த்து, அவர் கூறுவதின் முக்கிய கருத்துக்களை எடுத்துக் கொள்வோம்.

1. இந்தக் கொடுத்தல், வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது. ஏன்? கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கூடி வரும் நாளாக அது இருப்பதால், காணிக்கை பெறுவதற்குக் அந்த நாள் தேர்ந்தெடுக்கப் பட்டது. பிற நாட்களைப் பற்றி என்ன? பிற நாட்களைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இந்தக் கட்டளையைப் பொருத்தவரையில் வாரத்தின் முதல் நாள் செய்யப்பட வேண்டும் என தெளிவாக்கப்பட்டுள்ளது. தாங்கள் கூடிவரும் நாட்களில் எல்லாம், ஏன், தினம் கூடினாலும் கூட, காணிக்கை வசூலிப்பதை வழக்கமாக வைத்துக் கொள்ளும் பல மதக் குழுக்களும் உள்ளன. என்றாலும் வசனத்தின்படி நாம் நடப்பதாக இருந்தால் அதில் குறிப்பிட்ட நாளில் மட்டுமே ஆராதனையின் இந்தக் குறிப்பிட்ட பகுதி நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, கிறிஸ்துவின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கூடி வருகின்றனர். அந்த நாளில் தானே அங்கத்தினர்கள் கொடுக்கவும் எதிர்பார்க்கப் படுகின்றனர்.

2. சகல கிறிஸ்தவர்களும் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர்.கடந்த வாரத்தின் வரவுக்குத் தகுந்தபடி அவர்கள் கொடுத்தனர். தமது மக்களுக்கு எந்த வரவும் இல்லாத நிலையில், கர்த்தர் அவருடைய பிள்ளைகள் கொடுக்க வேண்டுமென

எதிர்பார்ப்பதில்லை. இருப்பினும் கொடுக்கத் தகுதியுள்ளவர்கள் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். அவர்கள் கொடுக்கத் தவறினால், அது பாவம்.

3. அவர்களுடைய வரவுக்குத் தக்கவாறு கொடுத்தலுக்காகச் சேர்த்து வைத்துக் கொள்ளப் பணிக்கப்பட்டனர். அந்நாட்களில் அவர்கள் காய்கனிகளையும், ஆடுமாடுகளையும், அல்லது பிற விளை பொருட்களையும் காணிக்கையாக செலுத்தினர். பணமும் கூட கொடுக்கப்பட்டது. இன்றைய நாட்களிலோ வழக்கமாக பணத்தை மட்டுமே காணிக்கையாகக்கொடுத்து வருகிறோம். ஏனெனில், பல மக்கள் தங்களிடமுள்ள விளை பொருட்களை விற்று பணமாக்கி வைத்துக் கொள்ளுகின்றனர். அல்லது சம்பளத்திற்கு வேலை செய்து கூலியைப் பணமாகப் பெறுகின்றனர். காணிக்கை பொருளாகவோ அல்லது பணமாகவோ கொடுக்கப்படுவது இடத்தையும், மக்களையும், நிலைமையையும் பொருத்த காரியம்.

4. அவர்கள் வரவுக்குத் தக்கதாகக் கொடுக்க கடமைப் பட்டிருந்தனர். அதாவது, அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டிய பங்கு எவ்வளவு? அது அவரவர் முடிவைப் பொருத்த காரியமாக இருந்தது. இன்றைய நாட்களிலும் அதுவே உண்மை. தசம பாகம் அல்லது பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென புதிய ஏற்பாடு போதிப்பதில்லை. மாறாக, யூதர்கள் வாழ்ந்து வந்த நியாயப் பிரமாணத்தை விட மிகவும் சிறப்பான ஒரு சட்டத்தின் கீழ் நாம் இன்று வாழ்வதால், அவர்கள் கொடுத்த பத்தில் ஒரு பங்கை விட, சந்தேகமின்றி, நாம் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.நமக்கு ஒரு சிறப்பான சட்டம், சிறப்பு வாக்குத்தத்தங்கள், மகத்தான நம்பிக்கைகள் யாவும் தரப்பட்டிருப்பதால், நாம் ஏன் அதிகமாகக் கொடுக்கக்கூடாது? இங்கே இந்தியாவில் நான் கவனித்த வரை ஒவ்வொருவரும் கொடுக்க விரும்புகின்றனர்; ஆனால் அது ஒரு சில பைசாக்களாகவே இருக்கின்றன. சிலருடைய தகுதியில் கொடுக்கக்கூடிய அதிக அளவு அவ்வளவாகவே இருக்கமுடியும். ஆனாலும், பலர் தற்போது கொடுப்பதைவிட மிகவும் அதிகமாக கொடுக்க முடியும். இந்தியாவிலுள்ள மக்கள் பலரிடம் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சினிமா இன்னும் இது போன்ற காரியங்களுக்குச் செலவிட பணமிருக்கிறது என்பதையும் நான் கவனித்திருக்கிறேன். இந்த மக்கள் உலகத்திற்கு அடுத்தவர்களாக இருப்பதை நான் உணருகிறேன். இந்தக் காரியங்களுக்கெல்லாம் பணம் இருக்கும்போது, உங்கள் பணத்தை என்ன செய்கிறீர்கள்? நீங்கள் இது போன்ற காரியங்களுக்காக செலவிட்டுக் கொண்டிருப்பீர்கள். இந்த

நாட்டிலும் தற்போது நாம் கொடுத்துக் கொண்டிருப்பதை விட அதிகமாகக் கொடுக்க முடியும். நமது வரவுக்குத்தக்கதாக நாம் கொடுக்க வேண்டுமென நமது கர்த்தர் கூறினார். உங்களுடைய வரவு என்னவென்று நீங்கள் அறிவீர்கள்; எனவே என்ன கொடுக்க வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். எப்படியிருந்த போதிலும், நீங்கள் கொடுப்பது அநேகமாக சில்லறைக் காசுகளாக இருக்காமல் காகிதப் பணமாக இருக்க வேண்டும். சில பேர் இன்று கொடுத்து வரும் காகிதப் பணத்தை விட மிக அதிகமாக கொடுக்க இயலும். என்றாலும், நீங்கள் எவ்வளவு கொடுக்க வேண்டும் என நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. அல்லது நீங்களும் எனக்குச் சொல்ல முடியாது. ஆனால் நாம் கொடுக்க வேண்டும் என்பதைக் கர்த்தர் அறிவார். எனவே, இனிமேல் நாம் அதிகமாகக் கொடுக்கத் தொடங்க வேண்டும். இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?

5. அவர் (பவுல்) வருகிற சமயத்தில் சேர்த்துக் கொண்டிராமல், ஏற்கனவே சேர்த்து வைத்து அவர் வரும்போது கொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். வேறுவிதமாகக் கூறினால், அவருடைய அறிவுரைப்படி அவர்கள் நடப்பார்களேயானால், அவர் வருகிற சமயத்தில் சகல காரியங்களும் கவனிக்கப்பட்டிருக்கும். அவரும் பிறருடைய தேவைகளைச் சந்திக்க வசதியாக இருக்கும். இன்றும் இது பொருந்தும். நாம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென கர்த்தர் நியமித்துள்ளாரோ அதை நாம் கொடுத்தால் கர்த்தரின் பணிகளைச் செய்யப் போதுமான பண வரவு நம்மிடம் இருக்கும். இன்று, மத உலகிலே உள்ள பல சபைகள் இந்த உபதேசத்தைப் பின்பற்றுவதில்லை. எனவே. எப்போதுமே அவர்கள் பணத்திற்காகக் கையேந்தி வருகின்றனர். சபை உறுப்பினர்கள் தாமே கொடுப்பதை விடுத்து, உலகத்து பிறமக்களிடம் உதவிக்காக பிச்சை எடுக்கின்றனர்: இவர்களில் சிலர் புத்தகங்களையும் பத்திரிக்கைகளையும் விற்றுப் பணமாக்குகின்றனர். இன்னும் சிலரோ நன்கொடை ரசீதுகள் அச்சிட்டு பணவேட்டையில் இறங்குகின்றனர்; அல்லது கட்டணங்கள் வைத்து பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தி பணம் சேர்க்கின்றனர். ஆனால், சபைத் தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு தங்களால் இயன்ற அளவு கொடுக்க வேண்டுமென தமது மக்களுக்குக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளார். இவ்விதமாக கர்த்தர் காரியங்களை நடத்துகிறார். அவருடைய திட்டத்தை விட சிறப்பாக நாம் எதையும் செய்து விடமுடியாது.

**தொடரும்...**

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டுவது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

மனிதனுடைய தேவைகளை சந்திப்பதற்காக தேவனால் வடிவமைக் கப்பட்ட ஸதாபனம்தான் குடும்பம் என்பது. (ஆதி. 2 : 8 – 25) குடும்பம் தன் காரியத்தில் தவறும் போது சமுதாயம் சீரழிகிறது. இன்றைய சமுதாய மானது, மிகவும் பலவீனமான, பயனற்ற, முறிந்து போன, உடைந்து போன குடும்பங்களை உள்ளடக்கியுள்ளது.

ஆதியிலிருந்தே ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைந்து வாழவேண்டும் என்று தேவன் திட்மிட்டிருந்தார். " அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்தீரி தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்: புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலை யாயிருக்கிறாள். (ரோம. 7 : 2) வீடு, குடும்பம் ஆகிய இரண்டுமே, பிதா, குமாரன் ஆகிய இருவருக்கும் மிகவும் முக்கியமாகப்பட்டது. " **இப்படியிருக் கிறபடியால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்** " மத். 19 : 6.

குடும்பத்திற்குள்ளாகத்தான் ஒரு கணவனும், மனைவியும் அன்பைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு கூட்டாளித்தனத்தையும், தங்களைத் தாங்களே திருப்திபடுத்திக்கொள்ளும் தன்மையையும் (1. கொரி. 7 : 2 – 5) பெற்றுக் கொள்கின்றனர். பிள்ளைகளை இந்த உலகிற்கு கொண்டுவரவும், அவர்கள் குடும்பத்தில் அப்பா, அம்மாவுடன் வளரவும் தேவன் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால், இன்றைக்கு குடும்பங்கள் சாத்தானால் தாக்கப் பட்டு இருக்கிறது. சாத்தானோடு இருக்கும் போராட்டத்தில், நம் குடும் பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் காரியத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் என்பது " ஒப்புக்கொடுத்தல் " என்ற கல்லின்

மேல் கட்டப்பட வேண்டும். முதலாவது, கணவனும், மனைவியும் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். (1. கொரி. 15 : 1 – 4 ; மாற்கு 16 : 16) அத்தோடு கூட, ஒருவருக்கொருவர் ஒப்புக் கொடுத்து வாழ வேண்டும். ஒரு வல்லமையான கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்ட குடும்பத்தில் ஒவ்வொருவர் நலனுக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல் மிகவும் அவசியம். ஒரு பலமுள்ள குடும்பத்தைக் கட்ட தன்னலமில்லாமல் நீ உன் நேரத்தையும் உன் பலத்தையும், உன் உடமைகளையும் அத்தோடு உன்னையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒப்புக்கொடுத்தலுக்கு விரோதி சுயநலம்.

தேவனுக்கு தேவன் செய்வதின் மூலம் குடும்பங்கள் கடட்டப்பட வேண்டும். தேவனுடைய சபையின் ஆராதனையில் தவறாமல் பங்கு கொள்வது கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு மிக அவசியமானது. " சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது பொல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபத்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். ( எபி. 10 : 25 ) ஓர் ஆராதனையையோ,ஒரு வேதபாட வகுப்பையோ அசட்டை செய்து கலந்து கொள்ளாமல் இருப்பது, கிறிஸ்தவம் அவ்வளவு முக்கியமல்ல என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வழிவகுத்துவிடும். ஒரு குடும்பத்தைக் கட்டுவதற்கு ஜெபமும், வேத வாசிப்பும் முக்கியப் பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், தேவன் 1. நித்தியமானவர் (சங். 90 : 2) 2. எல்லாம் வல்லவர் (ஆதி. 1 : 3), 3. நல்லவர் (யாக். 1 : 17), 4. பரிசுத்தமுள்ளவர் (1. பேதுரு 1 : 16), 5. எங்கும் வியாபித்துள்ளவர் ( சங். 139 ) முதல் முதலாக குடும்பத்தை ஸ்தாபித்த அந்த நித்திய தேவனை ஆராதிக்காமல் ஒரு மகிழ்ச்சியுள்ள, பலமுள்ள, வெற்றியுள்ள குடும்பங்களைக் கட்டவே முடியாது.

ஒருவரையொருவர் " மெச்சிக்கொள்ளுதல் " என்ற கல்லின்மீது கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டவேண்டும். மனிதகுலம் எதிர்பார்க்குதலில் மிகவும் தலையானது பிறரிடம் மெச்சுதலைப் பெற்றுக் கொள்வது. கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் இந்த எதிர்பார்ப்பு பொதுவானது. நம்முடைய இலட்சியமே, நம்மைச் சார்ந்த வர்கள், குழந்தைகள், பெற்றோர் இவர்களை பாராட்டுவதாக இருக்க வேண்டும். " ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்பு கிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே

நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம். ( மத். 7 : 12 ) மற்றவர்களை பாராட்டுதல் என்பதை எளிமையாக இந்த தங்கச் சட்டத்தைப் படித்து செயல்படுத்துவதாகும். இது செய்யப்படவும் வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் அன்பினால் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திலும் முக்கியமாகக் காணப்படவேண்டியது இந்த அன்பு என்பதுதான். “ ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்க ளும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே. 4 : 32) “ மன உருக்கம் ” என்பது முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. யாதொருவர் சாந்தம், அமைதி, பாதுகாப்பு, புரிந்து கொள்ளுதல் ஆகிய குணங்களுடன் இருந்தால் அவர் கள் தங்கள் குடும்பத்தை நன்றாகக் கட்டுவார்கள். புருஷர்கள் குறிப்பாக முரட்டுக் குணத்தைத் தவிர்க்க வேண்டும். “ புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளா திருங்கள் ” (கொலோ. 3 : 19) “ இரக்கம் ” “ மனதுருக்கம் ” ஆகிய இரண்டு குணங்களும் குடும்பத்தை பலமாகக் கட்டத் தேவைப்படுபவைகளாகும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டாயமாக 1. ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க பழகிக்கொள்ள வேண்டும். 2. ஒருவர் பேச்சுக்கு ஒருவர் மரியாதை கொடுக்க வேண்டும். 3. ஒருவரில் ஒருவர் அன்பு கூர வேண்டும். 4. எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இருப்பதில் அதிக நேரத்தை செலவு செய்யவேண்டும். 5. குடும்பத்திற்காகவும், தேவனுக்காகவும் வல்லமையாக ஒவ்வொருவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும். 6. அன்பாகவும், மனதுருக்கமாயும் இருக்க வேண்டும். 7. ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். 8. ஒருவரையொருவர் மெச்சிக் கொள்ள வேண்டும் 9. ஒருவர் சொல்வதை மற்றவர் கவனிக்க வேண்டும் 10. மற்ற குடும்பங்கள் பரலோகம் செல்ல உதவி செய்ய வேண்டும்.

வல்லமையான குடும்பங்களால்
வல்லமையான சபைகளைக் கட்ட முடியும்.

## சேரக்கடவோம்...

| | |
|---|---|
| தேவ சந்நிதியில்.... | 1சாமுவேல் 14:36 |
| கிருபாசனத்தண்டையில்... | எபிரெயர் 4:16 |
| விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும்... | எபிரெயர் 10:26 |

வாலிபர் பகுதி

# வாழ்க்கையின் பார்வை

Dr. **ஏபில் நாயகம்**

*(சென்ற மாத தொடர்ச்சி...)*

***கி***றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இவ்விதழின் மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வுலகில் நம்முடைய வாழ்க்கையின் நோக்கம் என்ற தலைப்பில் இரண்டு மாதங்களாக வேதத்தின் துணையோடு நாம் உருவகங்கள்' வழியாக காரியங்களை கற்றுக்கொண்டோம். முதலில் இவ்வுலக வாழ்க்கை ஒரு சோதனை என்றும், இரண்டாவதாக இவ்வுலக வாழ்க்கை நம்பிக்கையின் நிறைவேற்றுதல் என்றும் பார்த்தோம். இம்மாதம் மூன்றாவது உருவகமாக இவ்வுலக வாழ்க்கை தற்காலிகமானது' என்பதை புரிந்து கொள்ள முயற்சிக்கப் போகிறோம்.

வேதாகமம் பல முறை பூமியின் வாழ்க்கை தற்காலிகமானது என்பதை வலியுறுத்த பல உருவகங்களை பயன்படுத்துகிறது. வாழ்க்கை பனியை போன்றது, புகையை போன்றது, புல் மற்றும் பூவை போன்றது, ஓட்டத்தை போன்றது' என்று எப்படியாவது இந்த உண்மையை மனிதன் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று ஆவியானவர் இந்த உருவகங்களை பயன்படுத்துகிறார். யோபு 8:9 இல் 'நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம்: பூமியின்மேல் நம்முடைய நாட்கள் நிழலைப் போலிருக்கிறது' என்று வாசிக்கிறோம்.

நாம் வாழும் இப்பூலோக வாழ்வை சரியாக புரிந்துகொள்ள நாம் இரண்டு உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். முதலாவது, நிதியத்தின் கால அளவை ஒப்பிடும் பொழுது இவ்வுலக வாழ்க்கை மிக மிக குறைவானது. இரண்டாவது, இவ்வுலக வாழ்க்கை தற்காலிகமானது. இங்கே நாம் வெகு காலம் இருக்கப்போவது இல்லை. எனவே, இவ்வுலகத்தோடு நாம் நம்மை அதிமாக சம்மந்தப்படுத்திக்கொள்ளவோ, இணைத்து கொள்ளவோ கூடாது. சங்கீதக்காரன் இப்படியாக ஜெபிப்பதை கவனியுங்கள். **கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்** [சங்கீதம் 39:4].

பிதாவைத் தொழுதுகொள்ளுகிற யாவரும் எப்படி வாழ வேண்டும் என்று பேதுரு ஆசிரியர் சொல்வதை கவனிக்கலாம் : 1 பேதுரு 1:17 **அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும்**

**பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.** சங்கீதம் 119:19 இல், **பூமியிலே நான் பரதேசி: உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்** என்று வாசிக்கிறோம். ஆக, நாம் பரதேசிகளாக சஞ்சரிக்க வேண்டியவர்கள். இந்த பூலோக வாழ்க்கை நம் முடிவல்ல. நித்தியத்தை அடைய நாம் கடந்து செல்லவேண்டிய பாதை தான் இவ்வுலக வாழ்க்கை. நாம் மற்ற நம்பிக்கை உடையவர்களை போல் சிந்திக்கக் கூடாது என்பதை ஆழமாக பதியவைத்துக்கொள்ளவேண்டும். பிலிப்பியர் 3:19–20 இல் அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது' என்று ஒரு வேறுபாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த உண்மையை நம் புரிந்து கொண்டால், போதும் என்கிற சமாதானமும், குறைவில் நிறைவும் நிச்சயம் கிடைக்கும். நான் ஒன்றையும் அடையவில்லையே, எதையும் சாதிக்கவில்லையே, நினைத்ததை முடிக்கவில்லையே என்கிற கவலைகளில் நாம் சிக்கிக்கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால், இவ்வுலக வாழ்க்கை ஒரு முடிவல்ல. மாறாக, இப்படிப்பட்ட கவலைகளில் நாம் சிக்கிக்கொள்ளும்பொழுது தேவனுக்கு பகைஞராக இருக்கிறோம் என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். அதுமட்டுமல்ல, நாம் ஆத்துமாவிற்கு எதிராக போர்செய்கிறவர்கள் என்றும் பேதுரு கூறுகிறார். 1 பேதுரு 2:11 **பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி...**

ஆழமான இன்னொரு கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தை நாம் அதிகமாக நேசிக்கக்கூடாதபடிக்கும், அதில் நாம் சுகம் காணாதபடிக்கும் தேவன் பல நேரங்களில் நமக்கு குறைவையும், திருப்தியின்மையையும் ஏற்படுத்துகிறார். உலகத்தின் வாழ்க்கையில் நிறைவேறாத ஆசைகள் விரும்பியும், அடையமுடியாத காரியங்கள் இவை யாவும் நாம் இந்த பூமிக்காக படைக்கப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது. இந்த புரிதலைப் பெறுவதற்கு பதிலாக நாம் அவைகளினிமித்தம் சோர்வடைந்து தூக்கப்பட்டு தேவனை குறை கூற எத்தனித்து விடுகிறோம். இந்த பூமியில் நாம் நிறைவாய் வாழ முடியாது. ஏனென்றால், நாம் அதை விட அதிகமான ஒன்றிற்காக படைக்கப்பட்டு இந்த பூமியில் வாழ அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்.

செல்வச்செழிப்போடும், புகழோடும் வாழவே நாம் தேவனை தொழுதுகொண்டால் அந்த புரிதல் மிகவும் தவறானது. தற்காலிகமான வெற்றிக்கும், புகழ்ச்சிக்கும் செல்வத்திற்கும் நாம் வாழ கூடாது. தேவனுடைய பார்வையில் விசேஷமாக தென்பட்டவர்கள் எல்லாம்

செல்வத்தோடும், புகழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் வாழ்ந்தவர்கள் அல்ல.மாறாக இவ்வுலக வாழ்க்கை தற்காலிகமானது என்ற புரிதலோடு யாரெல்லாம் வாழ்ந்தார்களோ அவர்களே தேவனால் மெச்சப்பட்டிருக்கிறார்கள். பவுல் சிறை சென்றார். தாவீது பரதேசியாய் வாழ்ந்தார். யோவான் ஸ்நானகனின் தலை துண்டிக்கப்பட்டது. இயேசு சிலுவையில் பாடநுபவித்து மரித்தார். யாரெல்லாம் பிதாவிற்காக வாழ்ந்தார்களோ அவர்களெல்லாம் இவ்வுலக வாழ்வை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. அவர்கள் இப்பூலோக வாழ்வு தற்காலிகமானது என்பதை அறிந்து அதற்கேற்றாற்போல் வாழ்ந்தார்கள்.

யாரெல்லாம் இந்த உண்மையை அறிந்து வாழ்த்தார்களோ அவர்களின் தேவன் என்று என்னப்பட தேவன் வெட்கப் படுகிறதில்லை. எபிரெயர் 11:13– 16–இவர்களெல்லாரும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு. பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்: ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை.

மரணத்தின் போது நாம் வீட்டைவிட்டு செல்வதில்லை. வீட்டிற்குள்ளாக செல்கிறோம்.

இந்த மூன்று உருவகங்களும் நாம் வாழும் இந்த தற்காலிக வாழ்வை கடக்க உதவும் என நம்புகிறேன்.

**தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக**

---

## வந்து பாருங்கள்

| | |
|---|---|
| 1. தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள். | ..... சங் 66:5 |
| 2. கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள் | ..... சங் 46:8 |
| 3. தேவ ஆட்டுக்குட்டியை வந்து பாருங்கள் | ..... யோவா 1: 36,38 |
| 4. கர்த்தருடைய சர்வ ஞானத்தை வந்து பாருங்கள் | ..... யோவா 4:29 |
| 5. நன்மை அளிக்கும் கர்த்தரை வந்து பாருங்கள் | ..... யோவா 1:46 |
| 6. உயிர்த்தெழுந்த கர்த்தரை வந்து பாருங்கள் | ..... மத் 28:6 |

சிறுவர் பகுதி

# தேவமனிதன் – 6

Dr.பிரெய்ஸி

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு தேவ மனிதனைப் பற்றிப் பார்ப்போம்.

அபோஸ்தலர் 4:32–36ல் பின்வருவனவற்றைக் காண்கிறோம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. சீப்புருதீவானும், லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தைவிற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

அன்புள்ள குழந்தைகளே, இந்த மாதம் நாம் பர்னபா பற்றி பார்க்கலாம். பர்னபா தனது சகோதரர்களுக்கு உதவுவதற்காகவும், தேவனின் வேலைக்காகவும் தனது உடைமைகளை விற்றார். அதுமட்டுமல்ல, அவர் பவுலுடன் சேர்ந்து நற்செய்தியைப் பிரசங்கிக்க அனுப்பப்பட்டார். அவர் எப்போதும் தேவனுக்காக பணியாற்றவும் அவருடைய வார்த்தைகளைப் பரப்பவும் தயாராக இருந்தார்.

அதுபோலவே, கிறிஸ்துவுக்குள் உள்ள நம் சகோதர, சகோதரிகளுக்குத் தேவைப்படும்போது அவர்களுக்கு உதவ நாமும் தயாராக இருக்க வேண்டும், தேவனுடைய ஒளியைப் பரப்ப நாம் எப்போதும் தயாராக இருப்பது நல்லது.

அன்புடன்
**பிரெய்ஸி அக்கா**

# அடையாளங் காணாத பறக்கும் தட்டு, பழங்கால வானவெளிப் பயணிகள், பெர்மூடா முக்கோணம்

தமிழில். Bro. சாமுவேல் ராஜ், சத்தி

**(சென்ற மாத இதழின் தொடர்ச்சி...)**

**நூ**ற்றுக்கும் அதிகமான விமானங்கள் அலாஸ்கா வளைகுடாவில் வீழ்ந்துபோனபோதிலும், **அலாஸ்கிய முக்கோணம்** என நாம் ஏன் கேள்விப்படவில்லை? உண்மையென்னவென்றால், சிலர் பெர்மூடா முக்கோணத்தைப் பற்றி பல கட்டுக்கதைகளை உருவாக்கி, மற்றவர்களை எளிதில் முட்டாளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அனுபவமிக்க விமானிகளைக் கொண்டு. 36,000 முறைகள் பெர்மூடா முக்கோணப் பகுதியில் விமானங்களைப் பறக்கவிட்ட ஒரு விமானக் கம்பெனி இருக்கிறது. ஒரு முறையாகிலும் ஒரு விமானத்தைக் கூட இந்த விமானக் கம்பெனி தொலைத்ததுமில்லை வேறு வித்தியாசமான காரியங்கள் எதுவும் அங்கு நடக்கவுமில்லை. பெர்மூடா முக்கோணத்தைப் படித்த விஞ்ஞானிகள் எந்தவிதமான மர்மமும் கிடையாது என மிகத் தெளிவாகக் காட்டியுள்ளனர். விநோதமான, காட்டுத்தனமான பேய்க் கதைகளை எழுதி மக்கள் பணம் சம்பாதிக்க முயற்சிக்கின்றனர்.

உங்கள் வகுப்பு அறைக்குள் ஒரு பையன் ஓடிவந்து, **சைக்கிள் ஸ்டாண்ட் பக்கத்தில் ஒரு பூதம்! ஐயோ பூதம்** என்று கத்துகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். நீங்கள் எல்லாரும் வெளியில் ஓடிப்போய்ப் பார்க்கிறீர்கள். அங்கே ஒன்றையும் காணோம். அவன் பொய் சொன்னான் என நிரூபிப்பது எப்படி ? அவன் சொல்லுவான்; **அது இப்போதுதான் மறைந்து விட்டது; நிச்சயமாக அங்கே இருந்தது** என்று. உங்களால் எதுவும் செய்ய முடியாமல் போயிருக்கும். பிறரை முட்டாளாக்கி, பணம் சம்பாதிப்பதிலேயே சிலர் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கும்போது, அவர்கள் பிறரை தங்களிடம் ஈர்க்க எப்படிப்பட்ட காட்டுத்தனமான கதைகளையும், சொல்லத் தயங்கமாட்டார்கள். அவர்களுக்குத் தேவை பணமே. உண்மை என்னவென்றால், பெர்மூடா முக்கோணத்தைப் பற்றிய கதையில் உண்மை ஏதுமில்லை என விஞ்ஞானம் அறியும். மக்கள் இதுபோன்ற தவறான காரியத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

**பழங்கால விண்வெளிப் பயணிகள்**

எரிக் வான் டானிக்கென் என்ற டச்சுக்காரர் எழுதிய பல புத்தகங்களில், விண்வெளிப் பயணிகள் வேற்றுக் கிரகங்களிலிருந்து

பூமிக்கு வந்ததாகவும், பூமியில் மனித வாழ்க்கையை வாழத் தொடங்கினார்கள் என்பதாகவும் குறிப்பிட்டார். பல வேதாகமக் கதைகளையும் கூட வான் டானிக்கென் விளக்கிக் கூறும்போது, சம்பந்தப்பட்டவர்கள் பூமியில் வேலை செய்த பழங்கால விண்வெளிப் பயணிகள் எனக் குறிப்பிட்டார். பழைய ஏற்பாட்டிலுள்ள உடன்படிக்கை பெட்டியின் வரலாறுக்குப் புது அர்த்தம் கொடுத்து, அப்பெட்டியை விண்வெளிப் பயணிகள் பழங்கால வானொலி செய்தி அனுப்பும் இயந்திரமாகப் பயன்படுத்தி, பூமியில் இஸ்ரவேலர்கள் செய்ய வேண்டியதைப் பற்றிய செய்திகளை அதன் மூலம் அவர்கள் அனுப்பி வந்தனர் என்பதாக வான் டானிக் கென் கூறினார்.

2 சாமுவேல் 6:6 வசனத்திலும் 1 நாளாகமம் 13: 9 வசனத்தில் சொல்லப்பட்ட தகவலின்படி ஊசா என்பவன் தேவனுடைய உடன்படிக்கை பெட்டி விழாமல் தடுக்க தன் கையை நீட்டி அதைப் பிடித்தபோது, தேவனால் அடிக்கப்பட்டு அவன் இறந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அப்பெட்டி ஒரு வானொலி வாங்கிப் பெட்டியாக இருந்ததால் ஊசா மின்சாரம் பாய்ந்து இறந்து விட்டதாக வான்டானிக்கென் கூறுகிறார். வானொலியைப் பற்றி அறிந்தவர்களுக்கு, வானொலியை இயங்கச்செய்யும் எந்தப் பாகமும் உடன்படிக்கை பெட்டியில் கிடையாது என்பது தெரியும்.



அடுத்து, ஈஸ்டர் தீவில் உள்ள சிலைகளின் கூட்டம் மற்றுமோர் உதாரணமாகும். சத்திரத்தை நோக்கி நின்று கொண்டிருக்கும் இந்தப் பெரிய கருங்கல் சிலைகள் புற மதக் கடவுள்களை வணங்கிட பழங்கால மக்களால் உண்டாக்கப்பட்டனவாகும். ஆனால், இந்தச் சிலைகள் பழங்கால விண்வெளிப் பயணிகளால் அங்கு நிறுவப்பட்டன என்றும், ஏனெனில் மனிதர்களால் அச்சிலைகளை அங்கு தூக்கி நிறுத்த முடியாத அளவிற்கு அவை பெரியவை என்றும் வான்டானிக் கென் வலியுறுத்திச் சொல்லுகிறார். என்றபோதிலும், உண்மை வேறு விதமாக இருக்கிறது. தோர்ஹெயர்டால் என்பவர் எழுதிய **அக்கு அக்கு ஈஸ்டர் தீவின் இரகசியங்கள்** என்ற புத்தகத்தில் எவ்வாறு இந்தப் பழங்கால மக்கள் இந்தக் கற்களை இழுத்து நிறுத்தினர் என்பதை தானே நேரில் கண்டு, புகைப்படங்கள் எடுத்து பிரசுரித்துள்ளார். ஒரு மனிதன் பணம் உண்டாக்க முயலும் மற்றுமொரு கதையாகும் இது. இத்தகைய சரடு திரிக்கும் கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டு வான் டானிக்கென் நிறைய பணம் சேர்த்துவிட்டார்.

நானே வழியும், சத்தியமும், ஒளியுமாயிருப்பதாக இயேசு நமக்குச் சொல்லுகிறார். மனிதத் தேவைகள் அனைத்தையும் இந்த வாழ்க்கை அளிக்க இயலாது என்பதை உணர்ந்த மக்கள், சிறந்த வேறொன்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தேடிக் கொண்டிருக்கின்றனர். நமக்காக ஓர் இடம் ஆயத்தம் செய்யப் பட்டிருப்பதை நாம் அறிவோம்; நமது பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்து வைக்கவேண்டுமென நமக்குக் கூறப்பட்டுள்ளது. சில வேளைகளில் கள்ள சாட்சி களைக் காட்டித் திசைதிருப்பும் மனிதர்களிடமிருந்து, இளைஞர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சத்தியம் ஜீவனுள்ள தேவனை விட்டு அகலாமல் உங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்.




வானத்தையும் பூமியையும் தேவன் சிருஷ்டித்தார். அதை தெளிவாகவும் தவறில்லாத முறைகளிலும் செய்தார். நம்மைச் சுற்றிலும் நாம் காணும் எந்தப் பொருளாகிலும் ஏதோ ஒரு வினோதப் பிறவியால் உருவாயிற்று என நம்ப எந்தக் காரணமும் இல்லை. நாம் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும், தேவனுக்கு உகந்ததாகவும் மாற்றுவதில் மாறாத ஒரு சக்தியாக கிறிஸ்து விளங்குகிறார் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, அவர் ஒருவருக்கே ஊழியஞ்செய்யும்போது நித்திய ஜீவனை அடையும் வாக்குத்தத்தத்தை நீங்கள் அடைவீர்கள். அந்த மகத்தான வாக்குத்தத்தமானது. வேற்று கிரகக் கப்பல், பெர்முடா முக்கோணம், பழங்கால விண்வெளிப் பயணிகள் இவை அனைத்தையும் விட எவ்வளவோ மகத்துவமானது. எனவே, இப்படிப்பட்ட கட்டுக்கதைகளுக்கு செவி சாய்க்காமல் சத்தியத்திற்கு மட்டுமே உங்களை ஒப்புக்கொடுங்கள்.

# இயேசு அன்பாயிருந்த குடும்பம்

சகோ. **K.M.** பிலிப் – பவானி

***கி***றிஸ்துவுக்குள் அன்பான தேவமக்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் தேவனுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதோடு நம் வம்சத்தார் யாவரும் தெய்வீக அன்பால் நிரப்பப்பட்டவர்களாகயிருக்க வேண்டும் என்பதே நம் எல்லாருடைய விருப்பமாயிருக்கிறது. இதுவே தேவனுக்கும் பிரியமான ஒன்றாகும். ஆபிரகாமை ஆசிர்வதித்த தேவன் **பூமியிலுள்ள வம்சங்கவெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்** என்று சொல்வதைப் பார்க்கிறோம் [ஆதி 12:8]. இதில் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பொறுப்புண்டு என்பதைத்தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும் தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதம் தொடர்வதில் மகன் ஈசாக்கு சிறு வாலிப வயதில் 100% தேவனுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து வாழ்ந்தது மட்டுமல்லாமல், திருமண வயதில் கூட தனக்கேற்ற துணையை தேவன் கொடுப்பார் என்று தேவ கரத்தில் ஒப்புவித்து தியானத்தில் மூழ்கிப்போனதும், தன் வாழ்நாளில் எதிரிகள் **கர்த்தர் உம்மோடு கூட இருக்கிறார் என்று கண்டோம்** என்று பாராட்டும் பக்திக்குரிய வாழ்க்கை வாழ்ந்ததால் ஆபிரகாமின் வம்சம் தழைத்தது. ஈசாக்கின் மகன் யாக்கோபு இளம் வயதில் எத்தன் என்று பெயரெடுத்திருந்தாலும் ஒரு காலகட்டத்தில் தேவன் அவனைச் சந்தித்தபோது தன் பாவங்கள் எல்லாவற்றிற்காக மனஸ்தாபப்பட்டதுமல்லாமல் தேவனோடு ஒப்புரவாகி, தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து வாழ்ந்தான் [ஆதி 28]. இந்த ஒப்புக்கொடுத்தல் மூலமே **தேவஜனம்** என்று அழைக்கப்பட்ட 12 இஸ்ரவேல் கோத்திரங்களுக்கும் தகப்பனாக யாக்கோபு நிறைவாய் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆபிரகாமின் சந்ததி தொடர்ந்து தேவஜனமாக அங்கீகாரம் பெற்று அவருடைய பலத்தகரத்திற்குள் ஆசீர்வாதமாய் காக்கப்பட்டது. நம் குடும்பங்களும் தேவ அன்பால் தொடர்ந்து நடத்தப்பட குடும்பத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களை தேவ கரத்தில் ஒப்புக்கொடுத்து உண்மையாய் உத்தமமாய் வாழ்வோமாக.

தேவனுடைய இருதயத்திற்கேற்றவனாய் வாழ்ந்த தாவீதின் மகன் சாமுவேலைக் குறித்து **சாலமோன் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்தான்**, என்று பார்க்கிறோம். [1இரா 3:3] ஆகவே, தேவ ஞானத்தால் நிரப்பப்பட்டு, பரிசுத்த தேவ ஆலயத்தைக் கட்டும் பாக்கியத்தை பெற்றான். இப்பேர் பெற்ற சாலமோனின் மனைவிகளோ குடும்பத்தைக் கட்டாமல், விக்கிரக ஆராதனையை நுழைத்து ராஜ வம்சத்தை இடித்துப் போட்டார்கள்.

12 கோத்திரங்களின் இராஜ வம்சம், 2 கோத்திரமாக சுருங்கிப் போனது. மேலும் 98 ஆண்டுகள் வாழ்ந்த ஏலி மிகச் சிறந்த ஆசாரியனாக, நியாயாதிபதியாகத் திகழ்ந்தான். ஆனால், ஏலியின் பிள்ளைகளோ **பேலியாளின் பிள்ளைகளாய்ப் போனதால்** இருவரும் ஒரே நாளில் மரித்து ஆசாரிய வம்ச வாழ்க்கையையே இழந்து போனார்கள். ஆம் பிரியமானவர்களே, குடும்பமாக தங்களை தேவத்திட்டத்தில் இணைத்துக் கொண்டு பரிசுத்த வம்சம் தொடர்ந்து செழிப்பாயிருப்பதில் குடும்பத் தலைவன், தலைவி, பிள்ளைகள், பெரியவர்கள் எல்லோருக்கும் பொறுப்புண்டு என்பதை புரிந்து தேவக்கரத்தில் ஒப்புக்கொடுத்து வாழ்வோம். நம் குடும்பங்கள் தேவ அன்பால் செழித்து சமாதானத்தால் நிரப்பப்படும்.

அன்பானவர்களே! புதிய ஏற்பாட்டில் (யோ 11:5)-ல் இயேசு அன்பாயிருந்த ஒரு குடும்பத்தைக் குறித்து கூர்ந்து கவனிப்போம். எருசலேமுக்கருகில் உள்ள பெத்தானியா என்ற ஊரில் எத்தனையோ குடும்பங்கள் இருக்க மார்த்தாள், மரியாள், லாசரு ஆகிய மூவரும் வாழ்ந்த குடும்பத்தின் மீது இயேசு அன்பு செலுத்தியது உண்மையில் பெருமைக்குரியதாய், பாராட்டுக்குரியதாய் அவசியமான ஒன்றாய் காணப்படுகிறதல்லவா இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார் என்பதில் (யோவான் 11:5) குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் கட்டிக்காட்டப்படுவதைக் கவனியுங்கள். இத்தகைய இயேசுவின் மாபெரும் அன்பை அனுபவிக்க இக்குடும்பத்தார் ஒவ்வொருவரும் செய்த நற்கிரியைகளை ஆராய்ந்து அறிவதன் மூலம் நாமும் குடும்பமாக இயேசுவின் அன்பை ருசிக்க முடியும்

இந்தக் குடும்பத்தில் ஆழ்ந்த அன்பு செலுத்தும் பெற்றோர் இல்லை. ஆனால், என்றும் அழியாத இயேசுவின் அன்பு இருந்தது. இயேசுவின் அரவணைப்பால் இக்குடும்பம் திருப்தியாய், நிறைவாய் வாழ்ந்தது. மேலே குறிப்பிட்டது போல் இதில் ஒவ்வொருவரின் பங்கும் உண்டு. முதலில் மார்த்தாளின் பங்கை ,நற்கிரியைகளைக் கவனிப்போம். இயேசு பெத்தானியாவுக்குள் வந்த பொழுது மார்த்தாள் அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டு உபசரித்தாள் (லூக்கா 10:38) இப்படி இயேசு இவ்வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க பிரவேசிக்க, அன்பின் உபசரிப்பு ஆரம்பமாயிருந்தது. உபசரிப்பில் கனம் பண்ணுதலும் அடங்கும் **என்னைக் கனம் பண்ணுகிறவனை நானும் கனம் பண்ணுவேன்** என்பதற்கேற்ப இக்குடும்பத்து சகோதரன் லாசரு மரித்தபோது இயேசு வந்து, லாசருவை உயிரோடெழுப்பிக் கொடுத்து அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கனப்படுத்தினார். மேலும், லாசரு மரித்து நான்கு நாட்களாகியும் இயேசு வந்த பொழுது ஒரு கூட்ட யூத மக்கள்

அவர்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றும்படியாய் கூடி வந்திருந்தார்கள் என்பதில் (11:19.31) இக்குடும்பத்தார் மற்றவர்களிடம் காட்டிய அன்பின் பிரதிபலிப்பையே காட்டுகிறது. இப்படியே நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்து தேவ அன்பை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதைத்தான் இயேசு நல்ல சமாரியன் உவமையில், நீயும் அந்தப்படியே செய் (லூக்10) என்று வலியுறுத்துகிறார். அன்பற்ற பக்தியும் வீண் (1கொரி 13:1-3) என்பதை புரிந்து கொள்வோம். நம்மைச் சுற்றிலும் அன்பை விதைப்போம். ஆத்துமாக்களை அறுவடை செய்வோம்.

இக்குடும்பத்தில் மற்றுமொரு சகோதரி மரியாள். **இவள் ஒரு பாவி** என்று சொல்லி வெறுத்து ஒதுக்கும் வாழ்க்கை வாழ்ந்து வந்தாள் (லூக்கா 7:37,38) **பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்திருக்கிறார்** (1தீமோ 1:15) என்ற செய்தியைக் கேட்டிருந்த இவள், இயேசு தனக்கருகில் பெத்தானியாவுக்கு வந்திருக்கிற வாய்ப்பைப் பயன்படுத்தி, உடனே அவரை சந்திக்க பரிமள தைலத்தோடு ஆயத்தமாய் சென்றாள். இயேசுவை சந்தித்த அவள் மனம் உடைந்தது, நொறுங்கியது; கண்ணீரோடு அவருடைய பாதத்தில் வீழ்ந்தாள். தன் பாவங்கள் குறித்து மனங்கசந்து கண்ணீர் விட்டாள். இருதயத்தை ஆராய்ந்து அறிகிற இயேசு அவளை நோக்கி, **உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது** (48) என்றும் **உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்துடன் போ** என்றார் (50). இப்படி இயேசுவின் பாதத்தில் தன்னை தாழ்த்தி, விசுவாசத்தை அறிக்கையிட்ட இவளிடம் இயேசு அன்பாயிருந்தார். மேலும்இயேசு இவர்கள் வீட்டிற்கு வந்திருந்த போது (லூக் 10:38-42) அவரது பாதத்தின் அருகே அமர்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டாள் என்பதில் அவளது தாழ்மையும், இயேசுவின் ஜீவனுள்ள வார்த்தையை கேட்பதில் இருந்த ஆர்வமும், இயேசுவின் அன்பை அந்த குடும்பத்தில் நிலைக்கச் செய்தது. மேலும், சத்தியத்தை கேட்பதில் நாம் செலுத்தும் கவனம், பேசுபவரைக் கனப்படுத்துகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே நல்ல பங்காகும் (லூக் 10:42) இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட விருந்தில் மார்த்தாள் பணிவிடை செய்தாள் என்பதில் சகோதரிகள் இருவரிடமும் காணப்பட்ட தாழ்மை, இயேசுவின் அன்பை சுதந்தரிக்கும், மேன்மையை இக்குடும்பத்திற்கு பெற்றுத்தந்தது.

இக்குடும்பத்தின் இளைய சகோதரன் லாசருவைக் குறித்து இயேசுவே, **நம்முடைய சிநேகிதனாகிய லாசரு** என்று பெருமையோடு சொல்லுகிறார் (யோ 1:11) இந்த சிநேகம் லாசருவுக்கு இயேசுவிடமிருந்த ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது. வேதத்தில் ஆபிரகாமை தேவன் **என்னுடைய சிநேகிதன்** என்றழைத்து

மேன்மைப்படுத்துகிறார் (யாக் 2:23). இது தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் அப்படியே கீழ்படிந்த ஆபிரகாமுக்கும் உள்ள நெருக்கமான ஐக்கியத்தை காட்டுகிறது. இங்கு, லாசரு இயேசுவனிடம் வைத்திருந்த மாயமற்ற அன்பின் ஐக்கியத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த சிநேகம் மரித்த லாசருவை மீண்டும் உயிரோடு மீட்டுக் கொடுத்தது. உயிர்த்தெழுந்த லாசரு இயேசுவோடு பக்தியாயிருந்தான் (12:2) உயிர்த்தெழுந்த லாசருவின் வாழ்க்கை, யூதரில் அநேகர் போய் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைக்கச் செய்தது (12:10) நாமும் தேவ அன்பினால் அழைக்கப்பட்டு பாவத்திற்கு மரித்து நித்திய ஜீவனுக்கென்று உயிர்த்தெழுந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்பரிசுத்த வாழ்க்கையின் தாக்கம், அநேக குடும்பங்களை இயேசுவின் அன்பில் இணைக்க வேண்டும். இதுவே இயேசுவில் நம் சிநேகத்தின் மேன்மையாகும்.

இயேசு அன்பாயிருந்த இக்குடும்பத்தில் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. நல்ல பங்கு பரிமாறப்பட்டது. இழந்ததை மீண்டும் பெற்றுக் குடும்பம் நிறைவாக்கப்பட்டது. இவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. நம் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இயேசுவின் அன்பு பிரதிபலிக்க வேண்டும். இயேசுவின் கற்பனைகளுக்கு அப்படியே கீழ்படிவோம் (யோ14:15) அன்பர் இயேசுவின் வருகையில் அவரோடிணைந்து குடும்பமாக நித்திய வாழ்வுக்குள் பிரவேசிப்போம். ஆமென்!!

## முதலாவது...

1) பேதுருவை ஆண்டவர் சந்தித்த முதல் இடம் எது?
கெனேசரேத்துக் கடல் (லூக்கா 5:1,3)

2) முதலாவது தேவனுடைய உடன்படிக்கையின் அடையாளம் என்ன?
வானவில் (ஆதி9:12-17)

3) காணிக்கைப் பெட்டி செய்த முதல் மனிதன் யார்?
ஆசாரியனாகிய யோய்தா (2 இரா 12:9)

4) பிறக்கு முன் பெயரிடப்பட்ட மூவர் பெயர்கள் என்ன?
இஸ்மவேல் (ஆதி 16:11) - ஈசாக்கு (ஆதி 17:19) -இயேசு (மத்.1:21)

5) முதலாவது 'அல்லேலூயா' என்ற வார்த்தை எங்கு வருகிறது?
சங்கீதம் 104:35

6) முதல் இஸ்ரவேலின் ராஜா யார்?
சவுல் (1 சாமு 10:1)

*எபிரெயர் நிருபம்*

*அதிகாரம் - 1*

# இயேசுவானவர் தேவ தூதரிலும் மேலானவர்

Bro.V. *ஆசீர்வாதம், சென்னை.*

(**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**)

**1:3 உன்னதத்திலுள்ள**

மகத்துவ ஆசனம் – எபி. 8:1

மகத்துவமானவர் – எபி. 1:3

மகத்துவமானவர் என்றால் வர்ணிக்க வார்த்தைகள் இல்லாதவர். பரலோகத்தில் மகத்துவ சிங்காசனம் இருக்கிறது. அந்த சிங்காச னத்தில் பிதாவானவர் மகத்துவமானவராய் இருக்கிறார். அந்த மகத்துவமானவருடைய வலது பக்கத்திலே இயேசு உட்கார்ந்தார். தேவனுடைய வலது பக்கம் இயேசுவானவருக்கு வாக்களிக்கப்பட்டது. [சங்.110:1]. அந்த இடத்தைப் பெற்றுக்கொள்ள இயேசுவானவர், சிலுவைப்பாடுகளைச் சகிக்க வேண்டியதாயிருந்தது [எபி12:2; 1பேது 3:22; அப் 7:55–56].

**1:4 இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.**

1. சர்வத்துக்கும் சுதந்தரவாளி.
2. சிருஷ்டிகர்.
3. மகிமையின் பிரகாசம்.
4. தன்மையின் சொரூபம்.
5. சர்வத்தையும் தாங்குகிறார்.
6. பாவமன்னிப்பை ஏற்படுத்துகிறார்.
7. தேவனுடைய வலது பக்கத்திலே இருக்கிறார்.
8. எனவே, தேவதூதரிலும் மேலானவர்.

**1:4 தேவதாதரைப் பார்க்கிலும் விசேஷித்த நாமத்தைப் பெற்றுக்கொண்டார்:**

1. எபே. 1:20 இம்மையிலும் அதாவது இந்த உலகத்திலும், மறுமையிலும் அதாவது மறுவாழ்விலும் [பரலோகம்] அநேக பரிசுத்த வான்கள் பெயர் பெற்றவர்களாயிருக்கிறார். உதாரணமாக, [ஆபிரகாம், ஈசாக்கு, மோசே, எலியா, தாவீது]. இவ்வாறு அநேகர் பெயர் பெற்றவர்களாயிருந்தாலும் ஆட்சியிலும், வல்லமையிலும், புகழ்ச் சியிலும் சிறந்து விளங்குகிற அநேகருடைய பெயரைப் பார்க்கிலும்

அல்லது அதிகாரத்தைப் பார்க்கிலும் இயேசுவானவருக்கு விசேஷித்த பெயரும், அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. அப். 4:12 இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின் கீழே மனுஷருக்குள்ளே அவருடைய நாமம் மாத்திரமே கட்டளையிடப்பட்டுள்ளது.

3. அப் 10:43 அவருடைய நாமத்தினலே பாவ மன்னிப்பைப்பெறும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

4. பிலி. 2:10 இயேசுவின் நாமத்தில் வானோர், பூமியில் உள்ளவர்கள் உலகத்தை விட்டு மறைந்துப்போனவர்கள் யாவருடைய முழங்கால்களும் முடங்கவேண்டும்.

5. எபே 5:20 இயேசுவின் நாமத்தில் ஜெபங்கள் ஏறெடுக்கப்படவும், பூமியில் ஏறெடுக்கப்படும் ஜெபங்களை பரலோகத்துக்குக்கொண்டுக் செல்லும் வல்லமையும் இயேசுவின் நாமத்திற்கு உண்டு.

**1:4 தேவதூதரிலும் மேன்மையுள்ளவரானார்**

இயேசுவானவர் பெயரளவில் மாத்திரம் விசேஷித்த பெயரைப் பெற்றுக் கொள்ளவில்லை. மற்ற எல்லா காரியங்களிலும் விசேஷித்தவராகக் காண்பிக்கப்படுகிறார்.

**1:5 எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும் நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?**

**1:5 நீர் என்னுடைய குமாரன்** :

சங். 2:7ல் கர்த்தர் என்னை நோக்கி அதாவது பிதாவானவர் இயேசுவை நோக்கி நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று சொன்னார். இது பரலோகத்திலே நடந்த உரையாடலாகும். இயேசுவானவர் உலகத்தில் பிறப்பதற்கு ஏறக் குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பரிசுத்த ஆவியானவர் தாவீதின் வாயிலாக அதை தெரியப்படுத்தியிருக்கிறார். பரலோகத்தில் ஆயிரமாயிரமான தேவ தூதர்கள் இருந்தாலும் அவர்களில் யாரைக் குறித்தும் தேவன் இப்படி சொன்னதில்லை. இயேசுவை நோக்கி மாத்திரம் இதை சொன்னார் என்பதையும் பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்துகிறார். மேலும் இயேசுவானவர் உலகத்தில் வந்தபோது அவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறுகையில் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று தேவன் சாட்சி கொடுத்தார் (மத். 3:17). மேலும் இயேசுவானவர் மலையின்மேல் அப்போஸ்தலர்களுடனே ஜெபம் பண்ணுகையில் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவி கொடுங்கள் என்று தேவன் சாட்சிகொடுத்தபோது, (மத். 17:5) அப்போஸ்தலர்கள் அதைக் கேட்டார்கள் (2 பேது. 1:16-18).

இவ்வாறு இயேசுவானவர் பிதாவினால் கனத்தையும், மகிமையும் பெற்றார். இயேசுவானவர் பரலோகத்தில் இருக்கும் போதும் பூலோகத்தில் இருக்கும்போதும் இவர் என்னுடைய குமாரன் என்று பிதாவினால் சாட்சிப்பெற்றார்.

**1:6 மேலும், தமது தற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது: தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக் கடவர்கள் என்றார்.**

**1:6 இயேசுவானவரை தேவதூதர்கள் தொழுதுகொள்ளவேண்டும்.**

இயேசுவைத் தேவன் உலகத்தில் அனுப்பினார். அவரை தேவதூதர்கள் தொழுதுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதாவது தேவதூதர்கள் யாவரும் இயேசுவுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும். அவருடைய வார்த்தையை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும். லூக். 2:13–14ல் இயேசு பிறந்தபோது, ஏராளமான தேவதூதர்கள் பெத்லகேமிலே கூடி,

1. உன்னதத்திலே இருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக,

2. பூமியில் சமாதானம் உண்டாவதாக,

3. மனுஷர்மேல் பிரியம் உண்டாவதாக, என்றுச் சொல்லி தேவனைத் துதித்தார்கள். அதாவது இயேசுவானவர் பிறந்ததினால் அவர் மூலமாய் அநேகர் இரட்சிக்கப்பட்டு தேவனை மகிமைப்படுத்துவார்கள். தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையே இருக்கிற பிரிவினை நீக்கப் பட்டு சமாதானம் உண்டாகும். தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளுகிறவர்கள் மேல் தேவனுக்கு பிரியம் உண்டாகும். இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்ததினால் மேற்சொல்லப்பட்டவைகள் எல்லாம் நிறைவேறுமென்று தேவதூதர்கள் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். மேலும், இயேசுவானவர் பரலோகத்திற்குப்போய், தேவனுடைய வலது பக்கத்தில் உட்கார்ந்தார். தேவதூதர்கள் இயேசுவுக்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள் [I பேது. 3:22]. இயேசுவானவர் தேவதூதர்களை என்தூதன் என்று சொல்வதினாலே, தேவதூதர்கள் இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் [வெளி. 22:16, 1:1]. தேவதூதர்கள் இயேசுவானவரை தொழுதுக்கொள்ளவேண்டும். அவருக்குக் கீழ்பட்டிருக்கவேண்டும் அவர் சொல்கிறபடி நடக்க வேண்டும். எனவே இயேசுவானவர் ஒரு தூதரல்ல, தேவதூதர்களைக் காட்டிலும் அதிக மேன்மையானவர்.

**1:7 தேவதூதரைக் குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜீவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது.**

தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும் தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜீவாலைகளாகவும் செய்கிறாரென்று சொல்லியிருப்பது, தேவதூதரையேக் குறிக்கும். மாம்சத்தில் வாசம் பண்ணுகிற எந்த ஊமியக்காரரையும் அது குறிக்காது. ஏனென்றால் மாம்ச சரீரத்தில் வாசம்பண்ணுகிற தம்முடைய ஊழியக்காரரை தேவன் அக்கினி ஜூவாலைகளாக செய்யமாட்டார். ஆனால், தம்முடைய தூதர்களை காற்றுகளாகவும், அக்கினி ஜூவாலைகளாகவும் செய்கிறார். மேலும், தம்முடைய தூதர்களைத் தண்ணீர்களின் தூதனாகவும், அக்கினியின்மேல் அதிகாரமுள்ள தூதனாகவும், சூரியனில் நிற்கிற தூதனாகவும் நியமிக்கிறார்.

1. தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகச் செய்கிறார். வெளி 7:1 பூமியின் நான்கு திசை காற்றுகளும் தேவதூதரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

2. அக்கினி ஜூவாலைகளாக செய்கிறார். யாத். 3:2 அக்கினி ஜுவாலையிலே மோசேக்கு தரிசனமான தூதன் அப். 7:30-35, வெளி 14:18 அக்கினியின் மேல் அதிகாரமுள்ள தூதன்.

3. வெளி. 16:5 தண்ணீர், தூதனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

4. வெளி. 14:14 மேகம், தூதனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

5. வெளி. 19:17 சூரியனில் ஒரு தூதன் இருக்கிறான்.

இவ்வாறு தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகளாக இருக்கிறார்கள். ரோமர். 8:19ன்படி சர்வ சிருஷ்டியும் ஒன்றாகத் தவித்து வேதனைப்படுகிறது. ஏனென்றால், தேவனுடைய பிள்ளைகள் வெளிப்படும்போது, அந்த சிருஷ்டிகளும் தேவனுடைய பிள்ளைகளோடு மகிமைப்படும்படிக்கு மிகுந்த ஆவலோடுக் காத்துக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குறிய அடிமைதனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடு, சுய விருப்பத்தின் பேரில் அல்ல, கீழ்படித்தினவராலே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. அதாவது காற்றாக, சூரியனாக இருக்கிற தேவதூதர்கள் தங்கள் சுயரூபத்தையடைய காத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் மகிமையோடு வெளிப்படும்போது, தேவதூதர்களும் தங்கள் சுயநிலைக்குவந்து மகிமைப்படுவார்கள். அந்த நாளுக்காக பிரசவ வேதனைப்படுகிற ஒருஸ்திரியைப்போல வேதனையோடுக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

# ஓடு ! பின்னிட்டு பாராதே!

Bro. பாண்டியன்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான உறவுகளுக்கு வாழ்த்துக்கள். இந்தத் தலைப்பைப் படித்தவுடன் லோத்தின் குடும்பத்தாருக்கு தேவ எச்சரிப்பாக தூதர் சொன்னது இது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். லோத்தின் மனைவி உப்புத்தூணாக மாறியதையும் நாம் அறிவோம் காரணம் அவர்கள் செழிப்பை நம்பி சென்ற இடத்தில் பாவம் தலைவிரித்தாடியது. அதைப் பொறுக்கமாட்டாத தேவன் அந்த சோதோம், கொமோரா பட்டணங்களை அக்கினியால் அழித்துப் போட தீர்மானித்தார். அப்போதுதான், **உன் ஜீவன் பிழைக்க வேண்டுமானால் ஓடு! பின்னிட்டுப் பாராதே!** என்று ஒரு வாய்ப்பை தேவன் அவர்களுக்கு அளித்தார் [ஆதி 19:17] அப்படி அவர்கள் தங்கள் ஜீவன் தப்ப ஓடிய போது தான் லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் என்று பார்க்கிறோம். இது திருஷ்டாந்தமாக எப்படி நமக்குள்ளது என்று சற்றுப் பார்ப்போம்.

லோத்தின் குடும்பத்திற்கு அந்த சூழ்நிலை வரக்காரணம் என்ன? சிறுவயதில் தன் தகப்பனை இழந்து அநாதையாக இருந்த லோத்தை- அவனுடைய பெரியப்பா ஆபிரகாம் தனக்கு குழந்தையில்லாத காரணத்தால் அவனை வளர்த்து ஆளாக்கினான். லோத்து வளர்ந்து குடும்பம், பிள்ளைகள், சொத்துக்கள் என அந்தஸ்தில் வளர்ச்சியடையந்தபோது ஆபிரகாமை பிரியவேண்டிய சூழ்நிலை வந்தது. அப்போதும் ஆபிரகாம் நீ வலது பக்கம் போனால் நான் இடது பக்கம் போகிறேன் என்று பெருந்தன்மையோடே சொன்னான். [ஆதி13:9] இவனோ சுயநலமாக செழிப்பான இடம் தேர்வு செய்து முடிவில் அந்த இடத்தை விட்டு ஓடவோண்டியக் கட்டாயத்திற்குள் ஆனான்.

இந்த சம்பவத்தில் **பின்னிட்டு பாராதே** என்ற வார்த்தையே பிரதான எச்சரிப்பாக அமைந்துள்ளது. நம்முடையக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கூட பின்னிட்டுப் பாராமல் ஓட வேண்டியதாயிருக்கிறது. ஆண்டவர் இயேசு தன்னைப் பின் பற்றுவதில் தயக்கம் காட்டிய ஒருவனிடம் **கலப்பையின் மேல் தன் கையைவைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல** என்றார். [லூக்கா 9:62] தேவனுடைய ராஜ்ஜியம் சபையைக் குறிக்கிறது. சபையில் இருப்பவர்களை வேதம் விசுவாசிகள் என்று குறிப்பிடுகிறது. விசுவாசிகள் என்று பேரிடப்பட்டுள்ள நாம் அந்த விசுவாசத்தை விட்டு விலகி விடாமல் இருக்க வேண்டும் என்கிறார் பவுல் [1 தீமோ 4:1-3] முதலாம் நூற்றாண்டில் பிற்காலங்களில் என்று குறிப்பிடப்பட்ட இந்த வசனங்களின்படியே கி.பி. 6-ம் நூற்றாண்டில் சிலை வழிபாடுகளும்,

திருமணம் செய்யாமல், இருப்பது புனிதம், ஆராதனையில் இசைக்கருவிகள், பெண்கள் வழிநடத்துதல், பண்டிகைகள் போன்றவை பொய்யருடைய மாயத்தினால் வந்தது.

இவையெல்லாம் கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் செய்கிறவர்கள் பிசாசுகளின் உபதேசங்களுக்குச் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போனவர்கள் என்கிறார் பவுல். பொதுவாக சபைமக்கள் வாழ்க்கை ஒரு பந்தயத்தைப் போலிருக்கிறது. அதில் நாம் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடவேண்டுமானால் நம் சரீர இச்சைகளை ஒடுக்கி போராடி ஓடவேண்டியுள்ளது [1கொரி 9:24–27] உலகத்திற்குரிய பந்தயத்தில் வேகமாக ஓட வேண்டியுள்ளது. ஆனால், ஆவிக்குரிய விசுவாச ஓட்டத்தில் பொறுமையோடே ஓடவேண்டியுள்ளது. ஆம். எபி 12:1–ல் இப்படியாக காண்கிறோம். பாரமான யாவற்றையும், சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, பொறுமையோடே ஓடக்கடவேம்! ஆக நாமும் ஒரு விதத்தில் லோத்தின் கால மக்கள் போன்றவர்கள் காலத்தில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அதனால் தானோ என்னவோ ஆண்டவரும் லோத்தின் நாட்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் [லூக்கா 17:28–30] ஆக நாம் பாவத்தைத் தள்ளி விசுவாதச்தைப் பற்றிக்கொள்ள வேண்டியக் காலகட்டத்தில் உள்ளோம்.

நம் விசுவாசக் குறைவுக்கு முக்கியக் காரணம் வசனங்களை அக்கறையில்லாமல், அலட்சியமாக கேட்பதும், நினைப்பதும் ஆகும். அது மனுஷரால் சொல்லப்பட்டாலும் தேவ வசனமாகவே ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு நம்மிடத்தில் உள்ளது. [1.தெச.2:13] அதைவிட்டு பேசுபவரின் பின்னணியை யோசிப்பது அல்லது நம் கவனங்களை வேறு எங்கோ சிதறவிடுவது, அல்லது சபைக்கூடுதலை அடிக்கடி விட்டு விடுவது போன்ற காரியங்களில் ஈடு படுவோமானால் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகும், அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உருவாகிவிடும் என எச்சரிக்கிறது வேதம் [எபி3:12] திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. விசுவாசத்தை விட்டு விலகுவது **முதலுக்கே மோசம்** என்பது போல எந்த நோக்கத்திற்காக ரட்சித்தாரோ அதுவே வீணாகி போய்விடும், ஜாக்கிரதை!

பின்னிட்டுப் பார்ப்பதற்கு முக்கியக் காரணம் நாம் உலகத்தாரைப் போல வாழ செழிப்பாக வாழ ஆசைப்படுவது ஆகும். வசனத்தைக் கேட்டும் சிலர் கேட்டவுடனே போய், உலகத்திற்குரிய கவலைகளினாலும், ஐசுவரியத்தினாலும், நெருக்கப்பட்டு பலன் கொடாதிருக்கிறார்கள் [லூக் 8:14] வசனங்களைக் கேட்டு அதின்படி

செய்கிறவர்களாய் இருக்கும் போதே தேவனுடைய உண்மையான ஆசீர்வாதமும், சமாதானமும் நமக்குக் கிட்டும். ஆகவே நம்முடைய வாழ்க்கையில் நாம் எடுக்கும் முக்கிய முடிவுகளில் அதாவது ; வேலை, திருமணம், சொத்து விஷயங்கள், சிநேகிதங்கள் போன்றவற்றில் வேத ஆலோசனைப்படி நடக்கப் பிரயாசப்படுவோம். குறிப்பாக நாம் எதையாவது ஒன்றையே தேர்வு செய்ய வேண்டுமென இயேசு சொல்கிறார். தேவபக்திக்குரிய விசுவாச வாழ்க்கையா? அல்லது பூமிக்குரிய ஜீவனத்தின் பெருமையான வாழ்க்கையா ? இரண்டு எஜமான்கள் என்பது இதையேக் குறிக்கிறது (மத் 6:24)

கடந்த காலத்தில் ஓடினதும் தற்போது ஓடுகிறதுமான நம் விசுவாச ஓட்டம் வீணாகப் போகாதபடிக்குப்பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது (கலா 2:2). ஆதி அன்பை மதிக்காமல் செழிப்பான இடம் தேடிச் சென்ற லோத்தின் குடும்பத்தில் அவன் மனைவி பின்னிட்டு பார்த்து உப்புத்தூண் ஆனாள். பின்னிட்டுப் பார்ப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம் ஆதி அன்பைக் கைவிடுவது (வெளி 2:4). ஆக நிறைவாக நாம் விசுவாச ஓட்டத்தில் தொடர்ந்து இயேசுவை நோக்கி ஓடவேண்டும். ஏனெனில் **வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார். தாமதம் பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது** என்கிறார். நாமோ கெட்டுப் போகப் பின்வாங்குகிறவர்களாய் இராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறோம் (எபி 10:37-39). ஆகவே, தேவன் நம் மேல் பிரியமாயிருக்கும்படி பின்னிட்டுப் பாராமல் விசுவாச ஓட்டத்தில் இயேசுவை நோக்கி தொடர்ந்து ஓடுவோம். தேவக் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ✝

## வேதத்தில் மேல் வீட்டில் நடைபெற்ற காரியங்கள்

1) தானியேல் மேல் வீட்டில் ஜெபம் செய்தான் – தானி 6:10

2) எலியா சாரிபாத் விதவையின் மகனை மேல் வீட்டில் உயிரோடு எழுப்பினார் – 1 இராஜா 17:19

3) சூனேமியாள் எலிசா தங்க மேல் வீட்டறையை கொடுத்தாள் – 2 இராஜா 4:10

4) சூனேமியாள் மகனை எலிசா உயிரோடு எழுப்பியது மேல் வீட்டறையில் – 2 இரா 4:21-35

14,15 .09.2024 மேற்கு தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு -ல் நடந்த இலவச மருத்துவ முகாமின் போது...










## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

## எங்களது இதர வெளியீடுகள்


**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

**To:**

**திருமறை தியானம்**
**நம்பிக்கை TV**
செவ்வாய் – காலை 6:30 - 7:00 மணி
**நம்பிக்கை TV**
வெள்ளி – காலை 7:30 - 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.